

தில்லை.

அந்தப் பெட்டியைத் திறந்தார். செண்ட் பாட்டில்கள், பிரிக்கப்படாத ராடோ வாட்ச், ஒரு காமிரா, செல்ஃபோன்கள், ஐபாட், நிறைய சி.டி.க்கள் கிடந்தன. எல்லாமே சாஃப்ட்வேர் சி.டி.க்கள். சில பிரிண்ட் அவுட் காகிதங்கள் இருந்தன. அதை எடுத்துப் பார்த்தார்.

ஒரு சேஃப்டி வால்ட்டின் படங்கள். அதில் சிகப்பு பென்சிலால் பல இடங்களில் மார்க் செய்யப்பட்டிருந்ததைப் பார்த்தார். அதை அப்படியே மூடி வைத்தார்.

டேபிளில் லாப்டாப் வைக்கப்பட்டிருந்தது. அதைப் பிரித்துப் பார்க்கும் வழி எல்லாம் அவருக்குத் தெரியாது. தான் ஆராய்ந்ததில் ஏதும் தப்பாகத் தெரியவில்லை. ஆனால் அந்த சேஃப்டி வால்ட் படம் அவரை உறுத்தியது.

"பணம் போட்டு வைக்கும் எலெக்ட்ரானிக் பெட்டியின் படங்களை இவன் ஏன் வைத்திருக்கிறான்? அதில் ஏன் பென்சிலால் மார்க் செய்திருக்கிறான்?"

ஆண்டனியையோ அல்லது அவனுடைய அப்பாவையோ உடனே பார்க்க வேண்டும் என்று முடிவு செய்தார் பாண்டியன்.

ஆண்டனி தன்னுடைய ஹோட்டல் அறையின் வெளியே இருந்த லாபியில் சிகரெட் பிடித்தபடி யோசித்துக் கொண்டிருந்தான்.

"ஆல் செட், இன்றிரவே சற்குணத்தின் வால்ட்டைக் கொள்ளையடித்துவிட வேண்டியதுதான். நண்பர்கள் மூவரும் உதவிக்குத் தேவை"

செல்ஃபோனில் நிஷா அழைத்தாள். அது பேஸ்மண்ட் பகுதி என்பதால் சிக்னல் சரியாகக் கிடைக்கவில்லை.

படியேறி மெயின் ஹாலுக்கு வந்தான். அங்கே ஏதோ ஒரு சினிமாவின் பிரஸ் மீட்டுக்காகப் பலர் குழுமி இருந்தார்கள். அவர்களிடமிருந்து விலகி ஓரமாகச் சென்றான்.

"நிஷா. எதுக்கு அனாவசியமா ஃபோன் பண்ற? என்ன விஷயம்?"

"பாஸ். நாம மீட் பண்ணலாமா?"

"நிஷா.. இப்போதைக்கு மீட் பண்ண முடியாது. அடிக்கடி ஃபோன் பண்ணாதேன்னு சொல்லியிருக்கேன்ல. உனக்கு சீரியஸ்னஸ்ஸே இல்லையா?"

"பாஸ்.. இன்னைக்குதான் எங்கம்மாவோட பீரோவுல பார்த்தேன். எவ்வளவு நகைங்கிற? எல்லாம் கோல்ட், டயமண்ட், பேர்ல்ஸ்.. அவங்க பீரோவைத் திறந்து நகை எடுக்கும் போதுதான் பார்த்தேன். பல லட்சம் இருக்கும்"

ஆண்டனிக்கு சிரிப்பு வந்தது. "சொந்த வீட்டிலேயே ஆட்டை